Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House (A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 128 | உள்ளூர் - 08.05.2026 வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 128 | வெளியூர் - 09.05.2026 சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


**அரசின் 731 ஸ்டெனோகிராபர் வேலைகள் - 12-வது!**

**பிளஸ்–2 தேர்வு முடிவுகள் வெளியானது!**

**மேஷ ராசியில் செவ்வாய்..! டபுள் ஜாக்பாட்..!**

**நொடிக்கு நொடி அரசியல் மாற்றம்!**

## அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த புதிய 10% கூடுதல் வரி சட்டவிரோதமானது: அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு!

வாஷிங்டன், மே. 08–

அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த 10% சதவீதம் கூடுதல் வரி , சட்டவிரோதம் என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பல்வேறு நாடுகளின் பொருட்களுக்கு அமெரிக்க, அதிபர் டிரம்ப் 10 சதவீதம் வரியை விதித்திருந்தார். அமெரிக்க வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பால் டிரம்ப்புக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஆண்டு டிரம்ப் பொறுப்பேற்றார். அதன்பிறகு அந்நாட்டின் குடியேற்ற கொள்கையில் திருத்தம், மானியம் ரத்து என பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். தனது பேச்சை கேட்காத உலக நாடுகள் மீது அதிக வரி விதிப்பதாக அச்சுறுத்தல் விடுத்த அவர், சீனா, கனடா, மெக்சிகோ, இந்தியா உள்பட



சுமார் 100க்கும் மேற்பட்ட நாடுகள் மீது கடுமையான வரிகளை விதித்தார்.

இந்த வரி விதிப்பு நடவடிக்கைக்கு அமெரிக்க அரசியலமைப்பில் உள்ள சர்வதேச அவசர பொருளாதார அதிகார சட்டம் 1977–ஐ அதிபர் டிரம்ப் பயன்படுத்தினார். வர்த்தக பற்றாக்குறையை குறைத்து அமெரிக்காவில் அதிக உற்பத்தியை ஊக்குவிப்பதே தனது குறிக்கோள் என்று அவர் தெரிவித்தார். மேலும், வருவாயை உயர்த்தவும், வர்த்தக பேச்சுவார்த்தைகளில் மற்ற நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் அவர் வரி விதிப்பு நடவடிக்கையை பயன்படுத்தினார். இதனிடையே, டிரம்ப்பின் வரி விதிப்பு நடவடிக்கை சட்டவிரோதமானது என 3 கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து, இந்த வழக்கு உச்சநீதிமன்றத்துக்கு சென்றது.

இந்த சூழலில், இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், கடந்த பிப்ரவரியில் வெளிநாடுகள் மீதான பரஸ்பர வரிகளை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்பின் சுங்க வரி உத்திக்கு அமெரிக்க வர்த்தக கோர்ட்டு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது டிரம்ப் புதிதாக விதித்த 10% சதவீத உலகளாவிய வரிகள் சட்டவிரோதமானவை என்று அமெரிக்க வர்த்தக கோர்ட்டு அதிரடி தீர்ப்பு வழங்கி உள்ளது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் டிரம்ப் நிர்வாகம் மேல்முறையீடு செய்ய வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## திமுக மூத்த நிர்வாகிகளுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!



சென்னை, மே. 08–

தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

த.வெ.க. ஆதரவு கோரியது தொடர்பாக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆலோசனை நடத்தி வரும் நிலையில், மு.க.ஸ்டாலின் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மு.க.ஸ்டாலின் நடத்தி வரும் ஆலோசனையில், டி.ஆர்.பாலு, கே.என்.நேரு, பொன்முடி மற்றும் கனிமொழி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டுள்ளனர்.

ஏற்கனவே தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்து வந்த காங்கிரஸ் த.வெ.க.வுக்கு ஆதரவு கோரியது தி.மு.க.வில் கடும் அதிருப்தியை ஏற்படுத்திய நிலையில், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளின் நிலை என்னவாகும் இருக்கும் என்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## 12-ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் மனம் தளர கூடாது: ஸ்டாலின் அறிவுரை!

சென்னை,. மே. 08–

12ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் மனம் தளர கூடாது என திமுக தலைவர் ஸ்டாலின் அறிவுரை வழங்கி உள்ளார்.



அவரது அறிக்கை: 12ம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் வாழ்த்துகள். 95.2% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். முன்னாள் அமைச்சர் மகேஷ் தொடர்புகொண்டு, சென்ற ஆண்டைவிட அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று பெருமிதத்தோடு கூறியபோது, பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

மாணவச் செல்வங்கள், வாழ்வில் மேன்மையடைய மேற்படிப்புகளில் மேலும் கவனம் செலுத்திப் படியுங்கள். இத்தேர்வில் இம்முறை தேர்ச்சி பெறத் தவறியவர்கள் மனம் தளர வேண்டாம்; உங்களுக்கான அடுத்தடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுங்கள்; கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை. இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

## போரை நிறுத்த 14 அம்ச ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக வாய்ப்பு!

வாஷிங்டன், மே. 08–

போரை முடிவுக்கு கொண்டு வரும் 14 அம்ச ஒப்பந்தத்தில், அமெரிக்கா மற்றும் ஈரான் விரைவில் கையெழுத்திடுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்காசிய நாடான ஈரான் மீதான போர் இரண்டு மாதங்களைக் கடந்துள்ளது. தற்போது தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது. இரு தரப்பிடையே மோதலை கைவிடுவது குறித்து பேச்சுகள் நடந்து வருகின்றன.

இதையடுத்து, அமெரிக்க அமைதி பேச்சு குழுவை சேர்ந்த ஸ்டீவ் விட்காப் மற்றும் ஜாரெட் குஷ்னர் மற்றும் ஈரானிய அதிகாரிகளுக்கு இடையே நேரடியாகவும், மத்தியஸ்தர்கள் வாயிலாகவும் பேச்சு நடத்தப்பட்டு வந்தது.

இப்பேச்சின் பயனாக தற்போது இரு நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் 14 அம்சங்கள் கொண்ட ஒரு பக்க ஒப்பந்தம் இரு தரப்பும்



பரிசீலனை செய்தன.

இதைத் தொடர்ந்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்காவை தளமாக கொண்ட ‘ஆக்ஸியோஸ்’ என்ற தனியார் செய்தி நிறுவனம் கூறியுள்ளது. விரைவில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் அது கூறியுள்ளது.

இரு தரப்பு ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்:

* இரு நாடுகளுக்கு இடையேயான மோதல்களை அதிகாரப்பூர்வமாக முடிவுக்கு கொண்டு வருவதை இந்த ஒப்பந்தம் உறுதி செய்யும்

* ஹார்முஸ் ஜலசந்தி வழியாக பாதுகாப்பான கடல் போக்குவரத்துக்கு ஈரான் உத்தரவாதம் அளிக்கும். அதேவேளையில், ஈரான் துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை விலக்கி கொள்ளப்படும்

* யு ரேனியம் செறிவூட்டலை ஈரான் நிறுத்தி வைக்க ஒப்புக் கொள்ளும். இது 15 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட வாய்ப்பு உள்ளது

* தற்போதைய உயர் செறிவூட்டப்பட்ட யுரேனியம் இருப்பை அகற்றுவதற்கும், செயலிழக்க செய்வதற்கும் ஈரான் இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது

* ஈரான் இந்த நிபந்தனைகளை பின்பற்றுவதற்கு ஏற்ப, அமெரிக்கா படிப்படியாக ஈரான் மீதான பொருளாதார தடைகளை நீக்கும். மேலும், முடக்கப்பட்ட ஈரானின் நிதிகளை விடுவிக்கும்.


இவ்வாறு அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இரு தரப்பும் கையெழுத்திட்ட பின், 30 நாட்கள் அவகாசம் வழங்கப்படும்.

இதில் இடம்பெற்றுள்ள சில முக்கிய அம்சங்கள் குறித்து ஈரானின் கருத்தை தெரிந்து கொள்வதற்காக, அமெரிக்கா 48 மணி நேரம் கால அவகாசம் வழங்கியுள்ளது. போர் தொடங்கியதில் இருந்து இரு நாடுகளும் தீர்வு காண்பதற்காக இவ்வளவு நெருக்கமாக வந்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

## பிளஸ்–2

# தேர்வு முடிவுகள் வெளியானது! 95.2% பேர் தேர்ச்சி!!

### ஈரோடு மாவட்டம் முதலிடம்..!






சென்னை. மே. 08–

தமிழ்நாட்டில் பிளஸ்2 தேர்வு முடிவுகள் வெளியானது. சுமார் 8 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதிய +2 பொதுதேர்வில் 95.2 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

12ம்வகுப்புபொதுத்தேர்வில் 98.87 சதவீத தேர்ச்சி பெற்று ஈரோடு மாவட்டம் முதலிடம் பிடித்தது. பிளஸ் 2 தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் வரும் 13ம் தேதி வழங்கப்படும் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இந்த தேர்விலும் வழக்கம்போல, மாணவர்களை விட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். ww.tnresults.nic.in, www.dge.tn.gov.in, results.digilocker.gov.in என்ற இணையதளங்கள் வாயிலாக முடிவுகளை தெரிந்து கொள்ளலாம்.

மேலும், மாணவர்களின் வசதிக்காக அவர்கள் பள்ளியில் பதிவு செய்துள்ள செல்போன் எண்ணிற்கு குறுஞ்செய்தி வழியாகவும் மதிப்பெண் விவரங்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்படும் எனத் தேர்வுத்துறை அறிவித்திருந்தது. அதன்படி இன்று காலை தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பொதுதேர்வில் 95.2 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 98.87 சதவீத தேர்ச்சி பெற்று ஈரோடு மாவட்டம் முதலிடம் பிடித்துளளது. அடுத்து, சிவகங்கை மாவட்டம் 98.05 சதவீதம் தேர்ச்சியுடன் 2ம் இடமும், குமரி மாவட்டம் 97.63 சதவீதத்துடன் 3வது இடமும், நெல்லை 97.54 சதவீதத்துடன் 4வது இடமும் பிடித்துள்ளன.

பிளஸ்–2 பொதுத்தேர்வில் 489 அரசு பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதாவது, அரசுப் பள்ளி மாணவர்கள் 92.16%, அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் 96.14%, தனியார் பள்ளிகள் மாணவர்கள் 98.72% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேலும் இருபாலர் பள்ளிகள் 95.30%, ஆண்கள் பள்ளிகள் 90.49%, பெண்கள் பள்ளிகள் 97.08% தேர்ச்சி பெற்றுள்ளனர்

12ம்வகுப்புபொதுத்தேர்வில் சிறைக்கைதிகள் 238 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதாவது, மாற்றுத்திறனாளி மாணவர்களில் 76.92% பேரும், கைதிகளில் 95.20% பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**பாடவாரியான தேர்ச்சி விகிதம்:**

தமிழ்– 98.96 % . தமிழ் பாடத்தில் 83 பேர் 100–க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர்.

ஆங்கிலம்– 98.74 %. ஆங்கில மொழிப்பாடத்தில் 21 மாணவ, மாணவிகள் சதம் அடித்துள்ளனர்.

கணிதப்பாடத்தில் 732 மாணவர்கள் 100–க்கு 100 மதிப்பெண் எடுத்துள்ளனர்.

இயற்பியல்– 98.87 %, வேதியியல்– 98.82 %, விலங்கியல் 98.69 %, கணினி அறிவியல்– 6,975,, வணிகவியல்–683,, கணக்கு பதிவியல் –1,946,, பொருளியல்– 440 மாணவர்கள் 100–க்கு 100 மதிப்பெண் எடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு 95.3 சதவீத மாணவர்கள் தேர்ச்சி அடைந்த அடைந்த நிலையில் இந்தாண்டு 95.20 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

பிளஸ் 2 தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் வரும் 13ம் தேதி வழங்கப்படும் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

தேர்வு முடிவுகள், பள்ளியில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணுக்கும், தனித்தேர்வர்களுக்கு இணைய ஒவழியில் விண்ணப்பிக்கும் போது வழங்கிய கைப்பேசி எண்ணுக்கும் குறுஞ்செய்தி மூலமாக தேர்வு முடிவுகள் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் .‘வாட்ஸ் ஆப்’ மூலமும் அறியலாம்: ‘வாட்ஸ் ஆப்’ செயலி வழியாகவும் தேர்வர்கள் பின்வரும் வழிமுறையைப் பின்பற்றி தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

வாட்ஸ் ஆப் செயலியில் 78452 52525 என்ற எண்ணை உங்கள் தொலைபேசி எண் தொடர்புகளில் சேமித்து வைத்து, அந்த எண்ணில் hi எனப் பதிவிட்டு பின்னர் வரும் செய்தியில் துறையின் பெயர், தேர்வர்களின் வகுப்பை தெரிவு செய்தால், தொடர்ந்து வரும் பதில் செய்தியில் தேர்வெண், பிறந்த தேதியை உள்ளீடு செய்து அனுப்பினால் தேர்வர்களின் தேர்வு முடிவுகள் அதே வாட்ஸ் ஆப் செயலி உரையாடல் மூலம் கண்டறியலாம்.

இந்த ஆண்டு முதல் முறையாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் வாட்ஸ் ஆப் செயலியில் தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## ஈரான் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல்; மீண்டும் டிரம்ப் விடுத்த எச்சரிக்கை!

வாஷிங்டன், மே. 08–

ஈரான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால், எதிர்காலத்தில் இன்னும் கடினமாகவும், ஆக்ரோஷமாகவும் தாக்குதலை நடத்துவோம் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானுடனான போர் குறித்து செய்தியாளர்களிடம் டிரம்ப் கூறியதாவது; நாங்கள் ஈரானுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இன்று எங்களது 3 போர்க் கப்பல்களை வைத்து சில பெரிய இலக்குகளை குறிவைத்து தாக்கினோம். இதில், எங்களது கப்பல்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. அவர்களின் சில சிறிய படகுகளை அழித்தோம்.



ஈரான் அணு ஆயுதம் வைத்திருக்க நாங்கள் ஒருபோதும் உரிமை வழங்க மாட்டோம். அதற்குக் அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர். அவர்கள் இதில் கையெழுத்திடத் தயாராக இருக்கிறார்களா என்று பார்ப்போம். பேச்சுவார்த்தைகள் நன்றாகச் சென்று கொண்டிருக்கின்றன. என்னை விட அவர்கள் தான் இதில் கையெழுத்திட அதிக ஆர்வமாக உள்ளனர்.

ஈரான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால், எதிர்காலத்தில் இன்னும் கடினமாகவும், ஆக்ரோஷமாகவும் அவர்களை நாங்கள் வீழ்த்துவோம். நீங்கள் எதையும் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. ஏனெனில், ஈரானில் இருந்து ஒரு பெரிய தீப்பிழம்பு வெளிவருவதை மட்டும் நீங்கள் பார்ப்பீர்கள். எனவே அவர்கள் இந்த ஒப்பந்தத்தில் மிக வேகமாக கையெழுத்திடுவது அவர்களுக்கு நல்லது, இவ்வாறு அவர் கூறினார்.

**அதிகாரமில்லை**

இதனிடையே, இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த 10% புதிய வரி செல்லாது என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வரிகளை விதிக்க அதிபருக்கு அதிகாரம் கிடையாது என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது. இது டிரம்ப்புக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 08.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 25-ம் தேதி

# அடுத்த பத்தாண்டுகளில் மறைய போகும் பொருட்கள்!



தொழில்நுட்பம் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கிறது. நேற்றைய அற்புதங்கள் இன்று வழக்கொழிந்து வருகின்றன. நாளைய கண்டுபிடிப்புகள் இன்றைய தேவைகளை மாற்றுகின்றன. 2030–ஆம் ஆண்டிற்குள், இன்று நாம் பயன்படுத்தும் பல அத்தியாவசிய தொழில்நுட்பங்கள் முற்றிலுமாக மறைந்துவிடும் வாய்ப்புள்ளது. புதுமைகளின் எழுச்சி நமது வாழ்க்கை முறை, பணம் செலுத்தும் முறைகள் மற்றும் இணைப்பு ஆகியவற்றில் புரட்சியை ஏற்படுத்தும். குறிப்பாக, பௌதீகப் பொருட்களை விட டிஜிட்டல் அனுபவங்கள் அதிகளவில் முன்னுரிமை பெறும்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் கடவுச்சொற்கள் வழக்கொழிந்து வருகின்றன. அவற்றுக்குப் பதிலாக, அதிகப் பாதுகாப்பான பயோமெட்ரிக் உள்நுழைவுகள் பயன்படுத்தப்படும். இதன் பொருள், உங்கள் கைரேகை அல்லது கருவிழி உங்கள் டிஜிட்டல் உலகத்திற்கான திறவுகோலாக மாறும் என்பதாகும். இதேபோல், நமது பணப்பைகளில் உள்ள பிளாஸ்டிக் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகளும் மறைந்துவிடும். இதற்கு முக்கிய காரணம் டிஜிட்டல் பணப்பைகளின் எழுச்சியே ஆகும். ஸ்மார்ட் பூட்டுகள் பூட்டுகளுக்குப் பதிலாக வரும். இவை உங்கள் தொலைபேசி மூலம் உங்கள் வீட்டுப் பாதுகாப்பைக் கட்டுப்படுத்த உங்களை அனுமதிக்கும்.

பணப் பரிவர்த்தனைகள் மற்றும் காகித ரசீதுகள் ஏற்கனவே குறைந்துவிட்டன, மேலும் வரும் நாட்களில் அவை முற்றிலுமாக மறைந்துவிடக்கூடும். கம்பியில்லா அமைப்புகள், தொடுதலில்லா பணம் செலுத்தும் முறைகள் மற்றும் கிளவுட் சேவைகள் ஆகியவை ஆதிக்கம் செலுத்துகின்றன. கேபிள்கள் தேவைப்படாத இணைப்பு எதிர்காலத்தில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கும். ஸ்ட்ரீமிங் தளங்களின் வருகையால் தொலைக்காட்சி சேனல்களின் முக்கியத்துவமும் கணிசமாகக் குறைந்துள்ளது. சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மையான ஆற்றல் வாகனங்களின் வருகையால், பெட்ரோலில் இயங்கும் கார்களும் மறைந்து போகும் நிலையில் உள்ளன.

தரவு சேமிப்பகமும் ஒரு பெரிய மாற்றத்திற்கு உள்ளாக உள்ளது. ஒரு காலத்தில் ஃபிளாப்பி டிஸ்க்குகள் மற்றும் குறுந்தகடுகளுக்கு மாற்றாக இருந்த வெளிப்புற ஹார்டு டிரைவ்கள், இப்போது கிளவுட் சேமிப்பகத்திற்கு தங்கள் முக்கியத்துவத்தை இழந்து வருகின்றன. கிளவுட் சேமிப்பகம் வேகமானது மற்றும் பாதுகாப்பானது, இது பௌதீக சாதனங்களின் தேவையின்றி தரவைச் சேமிக்க அனுமதிக்கிறது.

இந்த தசாப்தம் இயந்திர யுகத்தின் முடிவையும், தடையற்ற டிஜிட்டல் யுகத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. உண்மையில், இந்த மாற்றங்கள் பாதுகாப்பு, வேகம் மற்றும் நிலைத்தன்மையை அதிகரிக்க உதவும். கண்ணுக்குப் புலப்படாத பரிவர்த்தனைகள் முதல் செயற்கை நுண்ணறிவால் இயங்கும் தானியக்கம் வரை, உலகம் அற்புதமான மாற்றங்களை நோக்கி நகர்கிறது. இந்த புதிய முன்னேற்றங்கள் நமது அன்றாட வாழ்வில் மிகவும் ஒருங்கிணைந்துள்ளதால், பழைய தொழில்நுட்பங்கள் இல்லாத ஒரு உலகம் நமக்கு இயல்பானதாகத் தோன்றும். எதிர்காலம் இப்போது நம் கண்முன்னே விரிகிறது.

# மே.வ. சட்டசபை கலைப்பு: ஆர்.என்.ரவி!



கொல்கத்தா, மே. 08–

தமிழகம், கேரளம், புதுச்சேரி, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய 5 மாநிலங்களுக்கு சட்டமன்ற தேர்தல் நடந்து முடிந்துள்ளது. அங்கு புதிய அரசு பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் கேரள மாநிலத்தின் 15–வது சட்டமன்ற ஆட்சிக்காலம் நிறைவடைந்த நிலையில் சட்டமன்றத்தை முறையாக கலைத்து கவர்னர் உத்தரவு பிறப்பித்து உள்ளார். இதுபற்றிய தகவல் நேற்று வெளியான அரசிதழில் வெளியாகி இருந்தது. அதில், இந்திய அரசியலமைப்பின் 174–வது பிரிவின் (2)வது உட்பிரிவின் (பி) பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கேரள கவர்னரான நான், ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், பதினைந்தாவது கேரள சட்டமன்றத்தை இன்று, மே 6, 2026 முதல் கலைக்கிறேன் என அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது. இதையடுத்து அங்கு 140 தொகுதிகளில் 102 இடங்களை கைப்பற்றி உள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சி அமைக்க இருக்கிறது.

இதேபோல மேற்கு வங்காளத்திலும் கவர்னர் ஆர்.என்.ரவி சட்டமன்றத்தை கலைத்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டு உள்ளார். அங்கு மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ், தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த பிறகு, தற்போதைய சட்டமன்றம் மே 2021–ல் அமைக்கப்பட்டது.

சமீபத்தில் நடந்து முடிந்த இரண்டு கட்டத் தேர்தல்களைத் தொடர்ந்து, பதவிக்காலம் முடிவடையவுள்ள சட்டமன்றத்தை கவர்னர் முறையாக கலைத்து அறிவித்து உள்ளார். மம்தா பானர்ஜி, பா.ஜனதாவின் வெற்றியை ஏற்க மறுத்து, தனது முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்யமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து வந்த நிலையில் கவர்னரின் சட்டமன்ற கலைப்பு உத்தரவு வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் கிடுக்குப்பிடியால் வளைகுடாவில் சிக்கித்தவிக்கும் 1500 கப்பல்கள்!



ஈரான், மே. 08–

ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் விதித்துள்ள தடை காரணமாக, சுமார் 1,500 கப்பல்களும் அவற்றின் மாலுமிகளும் வளைகுடாவில் சிக்கியுள்ளதாக, ஐ.நா.வின் சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) பொதுச்செயலாளர் பனாமாவில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

கடந்த பிப்ரவரி 28–ஆம் தேதியன்று இஸ்ரேல், அமெரிக்கா இணைந்து ஈரானுக்கு எதிராக தொடுத்த மத்திய கிழக்கு போர், அப்பகுதி முழுவதும் தெஹ்ரானின் பதிலடி நடவடிக்கைகளையும், முக்கியமான உலகளாவிய வர்த்தக பாதையான ஹார்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து முற்றுகையை தூண்டியது.

"தற்போது, ஏறத்தாழ 20,000 மாலுமிகளும், சுமார் 1,500 கப்பல்களும் சிக்கியு ள்ளன," என்று அர்செனியோ டொமிங்கஸ் அமெரிக்காவின் கடல்சார் மாநாட்டில் தெரிவித்தார். உலகில் நுகரப்படும் மொத்த பொருட்களில் 80 சதவீதத்திற்கும் அதிகமானவை கடல்வழி போக்குவரத்தின் மூலமே நடைபெறுகின்றன என்று டொமிங்கஸ் கூறினார்.

"சிக்கித் தவிக்கும் பணியாளர்கள், 'பிற நாடுகளின் நலனுக்காக தினமும் தங்கள் பணிகளை செய்யும் அப்பாவி மக்கள். ஆனால், தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட புவிசார் அரசியல் சூழ்நிலைகளால் அவர்கள் மாட்டிக்கொண்டுள்ளனர்'," என்று டொமிங்கஸ் கூறினார்.

மோதல் வெடிப்பதற்கு முன்பு, உலகின் மொத்த பெட்ரோலியம் மற்றும் எரிவாயுவில் ஐந்தில் ஒரு பங்கு ஹார்முஸ் நீரிணை வழியாக சென்றது. இந்த நீரிணை மூடப்பட்டதால், ஹைட்ரோ–கார்பன்களின் விலையில் உலகளாவிய அளவில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது.

சிக்கியுள்ள கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், நீரிணையை திறக்க கட்டாயப்படுத்தவும் ஒரு கடற்படை நடவடிக்கையை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்தார், ஆனால் சிறிது நேரத்திலேயே அந்த முயற்சியை கைவிட்டார்.

போரை முடிவுக்கு கொண்டுவருவது மற்றும் ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறப்பது தொடர்பான முன்மொழிவுகளுக்கு ஈரானின் பதிலுக்காக அமெரிக்கா தற்போது காத்திருக்கிறது.

# பரபரப்பான அரசியல் சூழலில் தவெக எம்.எல்.ஏ.க்கள் கூட்டம்!




சென்னை, மே. 08–

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றியது. தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்துள்ள நிலையில், தற்போதுள்ள தவெகவின் பலம் 112 ஆக உள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் தவெகவுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.

தங்களை ஆட்சி அமைக்க அழைக்குமாறு தவெக தலைவர் விஜய், கவர்னர் அர்லேகரை சந்தித்தார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கடிதம் இல்லாமல் ஆட்சி அமைக்க அழைக்க முடியாது என கவர்னர் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். இதனால் எஞ்சிய 6 இடங்களுக்காக விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் விஜய் ஆதரவு கேட்டுள்ளார். அவர்கள் இன்று முக்கிய முடிவு எடுக்க உள்ளனர்.

இதற்கிடையே, திமுக தங்களது எம்.எல்.ஏ.க்களுடன் ஒருபுறமும், அதிமுக தங்களது எம்.எல்.ஏ.க்களுடன் ஒருபுறமும் தனித்தனியாக ஆலோசனை நடத்தி வருகின்றனர். மேலும், அதிமுக ஆட்சி அமைக்க திமுக ஆதரவு கொடுக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இவ்வாறு தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நிலவி வருகிறது. ஆட்சி அமைக்க 118 பேரின் ஆதரவை கவர்னர் கேட்கும் நிலையில் காலை 9 மணிக்கு தவெக எம்.எல்.ஏ.க்கள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. தவெகவினர் என்ன முடிவு எடுக்கப்போகிறார்கள்? விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் விஜய்க்கு ஆதரவு கொடுக்குமா? என்ற பல கேள்விகளுக்கு இன்று விடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நாசிக் டிசிஎஸ் விவகாரம்: 25 நாள் தலைமறைவுக்குப் பின் சிக்கிய நிதா கான்!




நாசிக், மே. 08–

மராட்டியத்தின் நாசிக்கில், 'டாடா குழுமத்தின் கீழ் இயங்கும் டி.சி.எஸ்., நிறுவனத்தின் பி.பி.ஓ., அலுவலகம் உள்ளது. இங்கு பணிபுரியும் பெண்கள் மீது பாலியல் அத்துமீறல்கள் நடப்பதாக கடந்த பிப்ரவரியில் புகார் எழுந்தது. இதையடுத்து உண்மை நிலவரத்தை கண்டறிய நாசிக் போலீசார் ரகசிய விசாரணை நடத்தி வந்தனர். இதன்படி, அந்த அலுவலகத்திலேயே தூய்மை பணியாளர்களாக 4 பெண் போலீசார் உட்பட பலர் பணியில் சேர்ந்தனர்.

இந்த ரகசிய விசாரணையில், தென்கிழக்கு ஆசிய நாடான மலேஷியாவைச் சேர்ந்த இம்ரான் என்ற மதபோதகருடன் குற்றஞ்சாட்டப்பட்ட டி.சி.எஸ்., நிறுவன ஊழியர்கள் தொடர்பில் இருந்தது தெரியவந்துள்ளது. இந்த வழக்கில் கைதான, 'டீம் லீடர்கள், சக ஊழியர்களை சிறுபான்மையினர் நடைமுறைகளை பின்பற்றும்படி தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்தது தெரியவந்தது. இதேபோல் குற்றஞ்சாட்டப்பட்ட மனித வள மேலாளரான நிதா கான் தலைமறைவானார்.

25 வயதான நிதா கான், 2021ல் டிசிஎஸ் நிறுவனத்தின் பிபிஓ பிரிவில் பணியில் சேர்ந்து இருக்கிறார். பாலியல் வன்கொடுமை மற்றும் கட்டாய மதமாற்றம் தொடர்பான புகார்கள் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருவதில் நிதா கான் முக்கிய குற்றவாளி என்பது கண்டறியப்பட்டது.

இதன் பிறகு டிசிஎஸ் கம்பெனியில் இருந்து நிதா கான் இடை நீக்கம் செய்யப்பட்டார். 25 நாட்களாக தலைமறைவாக இருந்த நிதா கான் இன்று சத்ரபதி சம்பாஜி நகரில் கைது செய்யப்பட்டார். அவரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# உதயநிதி வீட்டில் பாதுகாப்பு: போலீஸ் முடிவில் திடீர் மாற்றம்!



சென்னை, மே. 08–

தி.மு.க., ஆட்சியில் துணை முதல்வராக இருந்த உதயநிதிக்கு, அரசின் சார்பில், சென்னை அபிராமபுரம் பசுமை வழிச்சாலையில், 'குறிஞ்சி இல்லம்' என்ற வீடு ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்த வீட்டிற்கு, இரவு, பகல் என, மூன்று ஷிப்டுகள் என்ற முறையில், 24 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டசபை தேர்தலில், தி.மு.க., கூட்டணி தோல்வி அடைந்துள்ளது. இதனால் நேற்று முன்தினம், உதயநிதி வீட்டுக்கு அளிக்கப்பட்ட போலீஸ் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. அங்கு பணிபுரிந்த போலீசாருக்கு, ஒரு நாள் விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. இதற்கிடையில், விஜயால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை. இதனால், அவர் பதவி ஏற்கும் நிகழ்ச்சியும் தள்ளிப்போனது.

ஆட்சி அமைப்பது பற்றி, தி.மு.க., மற்றும் அ.தி.மு.க., இடையே பேச்சு நடப்பதாக தகவல் வெளியானது. இதனால், உதயநிதி வீட்டில் இருந்து திருப்பி அனுப்ப ப்பட்ட போலீசார், நேற்று முன்தினம் நள்ளிரவில் மீண்டும் பணிக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் தற்போது வழக்கம்போல அங்கு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.


# தேர்தல் நடத்தை விதிகள் திரும்ப பெறப்பட்டன!




சென்னை, மே. 08–

தமிழ்நாடு, கேரளம், அசாம், மேற்கு வங்கம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அமலில் இருந்த தேர்தல் நடத்தை விதிகள் திரும்ப பெறப்படுவதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் திரும்ப பெறப்பட்டதைத் தொடர்ந்து வழக்கமான நிர்வாக பணிகளை மேற்கொள்ளவும், புதிய திட்டங்களை அறிவிக்கவும் அரசுக்கு இனி எந்தத் தடையும் இல்லை.

கடந்த மார்ச் மாதம் 14–ஆம் தேதி தமிழ்நாடு, கேரளம், அஸ்ஸாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள், புதுவை யூனியன் பிரதேசத்தில் சட்டமன்ற தேர்தலும் குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களில் இடைத்தேர்தல் கடந்த மார்ச் 14 ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தேர்தலுக்கான நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன.



# மேஷ ராசியில் செவ்வாய்..! டபுள் ஜாக்பாட்..!



மே 12 முதல் ஜூன் 20 வரை செவ்வாய் கிரகம் மேஷ ராசியில் சஞ்சரிப்பது, சில ராசிகளுக்குச் சுப பலன்களைப் பெற்றுத்தரும். தைரியம், விடாமுயற்சி மற்றும் முன்னெடுப்புகளின் அடையாளமாகத் திகழும் செவ்வாய், தனது சொந்த ராசியான மேஷத்தில் பிரவேசிப்பதால், மிதுனம், கடகம், சிம்மம், துலாம், தனுசு மற்றும் மீனம் ஆகிய ராசியினர் செல்வ யோகங்கள், நிதி ஆதாயங்கள் மற்றும் புதிய வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

தற்போது தனது நட்பு ராசியான மீனத்தில் சஞ்சரித்து வரும் செவ்வாய், மே 12 முதல் ஜூன் 20 வரை தனது சொந்த ராசியான மேஷத்தில் சஞ்சரிக்கவுள்ளது. விடாமுயற்சி, தைரியம், சாகச உணர்வு, முன்னெடுப்பு மற்றும் உழைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய செவ்வாய், இயல்பாகவே சாகசத் தன்மை கொண்ட மேஷ ராசியில் நுழைவதன் மூலம், சில ராசிகளுக்குச் செல்வ வளத்தைப் பெற்றுத்தரும். குறைந்த முயற்சியிலேயே அதிக லாபம் ஈட்டுவதற்கான பல வாய்ப்புகளைச் செவ்வாய் ஏற்படுத்தித் தரும். மிதுனம், கடகம், சிம்மம், துலாம், தனுசு மற்றும் மீனம் ஆகிய ராசியினர், மேஷத்தில் சஞ்சரிக்கும் இந்தச் செவ்வாயின் மூலம் அதிகபட்ச நன்மைகளைப் பெற வாய்ப்புள்ளது.

**மிதுனம்:** ஆதாயங்களுக்கு அதிபதியான செவ்வாய், ஆதாய ஸ்தானத்தில் (11–ஆம் வீடு) பிரவேசிப்பது, உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையை அமைத்துத் தரும். சில சிரமங்களிலிருந்தும் இழப்புகளிலிருந்தும் நீங்கள் விடுபடுவீர்கள். எதிரிகள், நோய் மற்றும் கடன் தொடர்பான பிரச்சனைகள் பெருமளவில் தீர்க்கப்படும். குறைந்த முயற்சியிலேயே நீங்கள் மிகப்பெரிய நிதி ஆதாயங்களை ஈட்டுவீர்கள். இன்னும் சிறந்ததொரு வேலைக்கு மாறுவதற்கான வாய்ப்பு உருவாகும். போட்டித் தேர்வுகள் மற்றும் நேர்காணல்களில் நீங்கள் பெரும் வெற்றியை அடைவீர்கள். உங்கள் பணியிடத்தில் பதவி உயர்வு பெறுவீர்கள். எதிர்பாராத வகையில் நிலம் சார்ந்த ஆதாயங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

**கடகம்:** இந்த ராசிக்கு 5–ஆம் மற்றும் 10–ஆம் வீடுகளுக்கு அதிபதியான செவ்வாய், 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பது, வேலையில்லாதவர்களுக்கு அரிய வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தரும். பணியில் இருப்பவர்களுக்கு, இன்னும் சிறந்ததொரு வேலைக்கு மாறுவதற்கான வாய்ப்பு அமையும். அவர்கள் தங்கள் பணியிடத்தில் நிச்சயமாக அதிகாரத்தைப் பெறுவார்கள். வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதற்கான பாதைகள் அமையும். உங்கள் பெயரும் புகழும் உயரும். குறைந்த முயற்சியிலேயே உங்கள் வருமானம் கணிசமாக அதிகரிக்கும். சொத்து தொடர்பான தகராறுகள் தீர்க்கப்பட்டு, நிலம் சார்ந்த ஆதாயங்கள் உண்டாகும். பங்குச் சந்தை முதலீடுகள் மூலம் மிகப்பெரிய லாபம் கொட்டும்.

**சிம்மம்:** இந்த ராசிக்கு மிகவும் சுபமான கிரகமாகத் திகழும் செவ்வாய், பாக்கிய ஸ்தானத்தில் (9–ஆம் வீடு) பிரவேசிப்பதால், குறைந்த முயற்சியிலேயே உங்கள் வருமானம் பன்மடங்கு பெருகும். உங்களுக்கு வர வேண்டிய பணம் மற்றும் நிலுவைத் தொகைகள் வசூலாகும். நிதி சார்ந்த பரிவர்த்தனைகள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகங்கள் மூலம் லாபம் மழையெனப் பொழியும். அரசியல் ரீதியான செல்வாக்கு உயரும். பணியில் இருப்பவர்களுக்கும், வேலையில்லாதவர்களுக்கும் வெளிநாடுகளில் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும். உடல்நலம் மேம்படும்.

**துலாம்:** ஏழாம் அதிபதியான செவ்வாய் பகவான் இந்த ராசிக்குள் பிரவேசிப்பதால், நிச்சயமாகச் சொத்து ஆதாயங்கள் உண்டாகும். பரம்பரைச் சொத்துகள் உங்களுக்குக் கிடைக்கும். வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. உயர்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் நீங்கள் காதல் வயப்படுவீர்கள் அல்லது அவரைத் திருமணம் செய்துகொள்வீர்கள். உங்கள் பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த நற்பலன்கள் கைகூடும். உங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தில், நீங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலான லாபங்கள் கிடைக்கும். சமூகத்தில் ஒரு முக்கியப் பிரமுகராக நீங்கள் அங்கீகரிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** ஐந்தாம் வீட்டில் செவ்வாய் பகவான் சஞ்சரிப்பதால், இந்த ராசியினருக்குப் பெரும் நிதி ஆதாயங்கள் உண்டாகும். பங்குச்சந்தை மற்றும் ஊக வணிகங்கள் மூலம் மிகுந்த லாபம் கிடைக்கும். சொத்துகளின் மதிப்பு உயரும். சொத்து தொடர்பான சர்ச்சைகள் உங்களுக்குச் சாதகமாகத் தீர்க்கப்பட்டு, மதிப்புமிக்க சொத்துகள் உங்களுக்குக் கிடைக்கும். நிதி சார்ந்த மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளிலிருந்து உங்களுக்கு விடுதலை கிடைக்கும். வசதிமிக்க ஒரு குடும்பத்தில் உங்களுக்குத் திருமணம் நடைபெறும். தொழில், வேலை மற்றும் வியாபாரம் சார்ந்த பணிகளுக்காக நீங்கள் வெளிநாடு செல்வீர்கள். குடும்ப வாழ்க்கையில் நிலவிய பிரச்சனைகள் தீரும். வாரிசு பாக்கியம் (குழந்தைச் செல்வம்) கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**மீனம்:** இந்த ராசிக்கு தனஸ்தான அதிபதியான செவ்வாய் பகவான், தனஸ்தானத்திலேயே சஞ்சரிப்பதால், சொத்து தொடர்பான பிரச்சனைகளும் சர்ச்சைகளும் சாதகமான முறையில் தீர்க்கப்படும். எதிரிகள், நோய்கள் மற்றும் கடன் தொல்லைகளிலிருந்து உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். நிதி சார்ந்த பிரச்சனைகள் பெருமளவுக்குத் தீர்க்கப்படும். பல வழிகளிலும் உங்கள் வருமானம் பெருகும். சற்று முயற்சி செய்தால் போதும்; வேலையில்லாதவர்களுக்கும், பணியில் இருப்பவர்களுக்கும் சிறந்த வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும். முக்கியப் பிரமுகர்களுடனான உங்கள் சமூகத் தொடர்புகள் அதிகரிக்கும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## அறுவை சிகிச்சை இல்லாமல் புற்றுநோய் கட்டியை அழிக்கலாம்..!



புற்றுநோய் என்ற வார்த்தையே பலருக்கு அச்சத்தை ஏற்படுத்தும் நிலையில், அதன் சிகிச்சையாக பயன்படுத்தப்படும் கீமோதெரபி கூட முடி உதிர்தல், வாந்தி, உடல் பலவீனம் போன்ற கடுமையான பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிறது. இந்த சூழலில் மருத்துவ உலகில் புதிய நம்பிக்கையாக உருவெடுத்துள்ளது 'கிரையோஅப்லேஷன்' அல்லது 'கிரையோதெரபி' சிகிச்சை முறை.

இதில் புற்றுநோய் கட்டிக்குள் மெல்லிய ஊசி போன்ற கருவி செலுத்தப்பட்டு, அதன் மூலம் –140°C முதல் –190°C வரை கடும் குளிர் உருவாக்கப்படுகிறது. இந்த அதீத குளிரால் கட்டி செல்கள் பனியாக உறைந்து, அவற்றின் அமைப்பு உடைந்து அழிக்கப்படுகின்றன. பின்னர் மீண்டும் உருக்கி, இரண்டாவது முறையும் இதே செயல்முறை மேற்கொள்ளப்பட்டு புற்றுநோய் செல்கள் முழுமையாக அழிக்கப்படுகின்றன.

இந்த சிகிச்சையின் முக்கிய பலமாக பெரிய அறுவை சிகிச்சை தேவையில்லாதது, குறைந்த வலி, விரைவான மீட்பு மற்றும் கீமோதெரபி போன்ற கடுமையான பக்கவிளைவுகள் இல்லாதது குறிப்பிடப்படுகிறது. மேலும் இது மீண்டும் பயன்படுத்தக்கூடிய சிகிச்சை என்பதால் கட்டி மீண்டும் தோன்றினாலும் பயன்படுத்த முடியும்.

இந்தியாவில் தற்போது டாடா மெமோரியல், எய்ம்ஸ், அப்பல்லோ, ஃபோர்டிஸ் போன்ற முன்னணி மருத்துவமனைகளில் இந்த முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், புரோஸ்டேட் மற்றும் மார்பக புற்றுநோய் போன்ற ஆரம்ப கட்ட நோய்களுக்கு இது பயனுள்ளதாக கருதப்படுகிறது. எனினும், இந்த சிகிச்சை எல்லா வகை புற்றுநோய்களுக்கும் பொருந்தாது. பெரிய கட்டிகள் அல்லது இரத்தப் புற்றுநோய் போன்ற நிலைகளில் இது பயனளிக்காது என்றும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்கிடையில், கிரையோஅப்லேஷன் மூலம் அழிக்கப்படும் புற்றுநோய் செல்கள் உடலின் நோயெதிர்ப்பு அமைப்பை தூண்டும் தன்மை கொண்டதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இதனால் எதிர்காலத்தில் இந்த சிகிச்சை மற்ற மருத்துவ முறைகளுடன் இணைந்து புற்றுநோய் சிகிச்சையில் முக்கியமான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என நிபுணர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# ஒரு வீட்டிற்கு ஒரு கேஸ் இணைப்பு மட்டுமே..! மத்திய அரசின் புதிய விதிமுறை..!





புதுடெல்லி, மே. 08–

உங்கள் வீட்டில் LPG சிலிண்டரைப் பயன்படுத்துகிறீர்களா? அதே சமயம், உங்களிடம் PNG (குழாய் வழி இயற்கை எரிவாயு) இணைப்பும் உள்ளதா? அப்படியென்றால், இந்தச் செய்தி உங்களுக்கானது தான். மத்திய அரசு "ஒரு வீட்டிற்கு ஒரு எரிவாயு இணைப்பு" (One Household, One Gas Connection) என்ற கொள்கையை மிகுந்த லட்சியத்துடன் அமல்படுத்தியுள்ளது. இதன்படி, ஒரே வீட்டில் இரண்டு வகையான எரிவாயு இணைப்புகளை வைத்திருப்பது அனுமதிக்கப்படாது. உங்கள் பகுதியில் PNG வசதி கிடைக்குமென்றால், நீங்கள் நிச்சயமாக LPG இணைப்பைக் கைவிட வேண்டியிருக்கும். இது தொடர்பாக மத்திய பெட்ரோலியத் துறை ஏற்கனவே தெளிவான அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

இந்த விதிகள் "இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் விநியோக ஆணை, 2026"–இன் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. நகர்ப்புறங்களில் PNG இணைப்பு வசதி கிடைத்த பிறகும், பலர் பாதுகாப்பு காரணங்களுக்காகவோ அல்லது பிற காரணங்களுக்காகவோ LPG சிலிண்டர்களைத் தங்கள் வசம் தொடர்ந்து வைத்துள்ளனர். இது எரிவாயு இருப்புகளின் மீது தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்துவதாக அரசு கருதுகிறது.

அரசின் காலக்கெடுவின்படி, PNG வசதி உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் 90 நாட்களுக்குள் ஏதேனும் ஒரு இணைப்பைத் தேர்வு செய்ய வேண்டும். இந்தக் காலக்கெடு ஜூன் 30, 2026 அன்று முடிவடைகிறது. இந்தக் காலத்திற்குள் ஒரு முடிவு எடுக்கப்படாவிட்டால், அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொண்டு, விதிகளை மீறுபவர்களின் இணைப்புகளைத் துண்டிக்கக்கூடும். நாடு முழுவதும் உள்ள அதிகா ரிகள், சட்டவிரோதமாக இரண்டு இணைப்புகளைப் பயன்படுத்தும் வீடுகளைக் கண்டறியும் பணியை ஏற்கனவே துரிதப்படுத்தியுள்ளனர்.

## 8-வது ஊதியக்குழு: பாதுகாப்பு, ரயில்வே ஊழியர்களுக்கு லேட்டஸ்ட் செய்தி..!




டெல்லி, மே. 08–

டெல்லியில் அமைந்துள்ள பாதுகாப்பு மற்றும் ரயில்வே துறைகளுடன் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் கலந்தாய்வுகளை மேற்கொள்ளவிருப்பதாக 8வது ஊதியக் குழு ஓர் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**கூட்டங்கள் எப்போது நடைபெறும்?**

பாதுகாப்பு அமைச்சகம் (MoD) மற்றும் ரயில்வே அமைச்சகம் (MoR) ஆகியவற்றுடனான கூட்டம், மே மாதம் 13 மற்றும் 14 ஆம் தேதிகளில் நடக்கும் என தெரிவிகப்பட்டுள்ளது. இது நாட்டின் தலைநகரான புது தில்லியில் நடக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த கூட்டத்தில் பாதுகாப்புப் படைகள் மற்றும் ரயில்வே துறையைச் சார்ந்த, ஊழியர் பிரதிநிதிகள், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள், ஊழியர் சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் பங்குகொண்டு 8வது ஊதியக்குழு உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8வது ஊதியக்குழு கூட்டங்கள்:

துறைகள்
பாதுகாப்பு அமைச்சகம் (MoD), ரயில்வே அமைச்சகம் (MoR)

கூட்டத் தேதிகள்
மே 13 (புதன்கிழமை) மற்றும் மே 14 (வியாழக்கிழமை), 2026

இடம் புது தில்லி (சரியான இட விவரங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்குப் பிறகு தெரிவிக்கப்படும்)

பங்கேற்பாளர்கள்
பாதுகாப்புப் படைகள் மற்றும் ரயில்வே துறையைச் சார்ந்த, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள், சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள்.

விண்ணப்பிக்க கடைசி தேதி மே 10

# இது தேர்வு முடிவுதான் இதுவே லைப் கிடையாது: மாணவர்களுக்கு அன்பில் மகேஷ் அறிவுரை!



சென்னை, மே. 08–

முன்னாள் பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள பதிவில், "12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியாகியிருக்கிறது. தேர்வெழு திய மாணவச் செல்வங்களுக்கும், அவர்களுக்கு உந்துசக்தியாக இருந்த ஆசிரியப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். இது 'ரிசல்ட்' தான், இதுவே 'லைப்' கிடை யாது என்பதை மாண வர்களும், பெற்றோர்களும் உணர்ந்து இந்நாளை கடக்க வேண்டும் என வேண்டு கோள் விடுக்கிறேன். நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்களின் வழிகாட்டு தலில், 2025–26 கல்வி யாண்டில் நாம் மேற்கொண்ட சீரிய பணிகளால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டும் தேர்ச்சி விகிதம் சாதனை படைக்கும் என நம்புகின்றோம். மாணவச் செல்வங்கள் தங்கள் முடிவுகளை http://tnresults.nic.in மற்றும் http://dge.tn.gov.in இணையதளங்களில் தெரிந்துகொள்ளலாம்." என்று தெரிவித்துள்ளார்.

## விஜய்க்கு, முதல்-அமைச்சருக்கான பாதுகாப்பு வழங்கியது எப்படி? - டி.ஜி.பி.யிடம் கவர்னர் கேள்வி!



சென்னை, மே. 08–

கவர்னர் அர்லேகர், தலைமை செயலாளர் சாய்குமார் மற்றும் டிஜிபி.யிடம் சில கேள்விகளை எழுப்பி உள்ளதாக அரசியல் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

அதாவது ஒரு தேர்தல் முடிந்து, மெஜாரிட்டி இல்லாத சூழ்நிலையில் சட்டப்படி நீங்கள் முதலில் என்னை (கவர்னர்) சந்தித்து ஆலோசித்த பிறகே எந்த முடிவுக்கும் வந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு முன்னதாக நீங்கள் எப்படி அவரை (விஜய்) சந்தித்தீர்கள். அதோடு அவருக்கு எப்படி முதல்–அமைச்சருக்கான வசதிகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்தீர்கள் என்று கவர்னர் கேள்வி எழுப்பி உள்ளார்.

மேலும், சென்னை மெரினாவில் விஜய்யை ஆட்சியமைக்க அழைக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து இளைஞர்கள் போராட்டம் நடத்தப்போவதாக வரும் தகவல்கள் குறித்தும் கவர்னர் அறிவுறுத்தி, புதிய ஆட்சி பொறுப்பேற்கும் வரை தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை அமைதியான முறையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

## பீகார் அமைச்சரவை விரிவாக்கம்; நிதிஷ் மகன் உட்பட 32 பேர் அமைச்சராக பதவியேற்பு!



பாட்னா, மே. 08–

பீகாரில் ஐக்கிய ஜனதா தளம், பாஜ கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்த நிலையில் கடந்த மாதம் முதல்வராக இருந்த நிதிஷ்குமார் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதை அடுத்து தனது பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில் பீகாரில் பாஜ தலைமையிலான அரசின் முதல் அமைச்சரவை கூட்டம் ( 07.05.2026)நடைபெற்றது. சாம்ராட் சவுத்ரி தலைமையிலான அரசில் மொத்தம் 32 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டுள்ளனர்.

## சென்னைக்கு திரும்பும் அதிமுக எம்.எல்.ஏ.க்கள்!



சென்னை, மே 08–

புதுச்சேரி சொகுசு விடுதியில் தங்கியுள்ள அதிமுக எம்.எல்.ஏ.க்களை உடனடியாக சென்னைக்கு திரும்பி வர அக்கட்சித் தலைமை உத்தரவிட்டுள்ளது. அதிமுக எம்எல்ஏக்களிடம் நேற்று கடிதம் பெறப்பட்ட நிலையில் இன்று அவர்கள் அங்கிருந்து சென்னைக்கு புறப்படுகின்றனர்; ஒருசிலர் மாலை புறப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. அனைவரும் சென்னை வந்தது அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

## தவெக தலைவர் விஜயுடன் புஸ்ஸி ஆனந்த் ஆலோசனை!






சென்னை, மே. 08–


தவெக தலைவர் விஜயின் நீலாங்கரை இல்லத்திற்கு சென்ற அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அவருடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

தவெக எம்எல்ஏக்களுடனான ஆலோசனை கூட்டத்துக்கு முன்பு விஜயை சந்தித்து அவர் பேசினார்.



## சினிமா துளிகள்..!

### 'சியான் 63' படத்தின் படப்பிடிப்பு தொடங்குவது எப்போது?



'இருமுகன்' இயக்குநர் ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் தனது 63–வது படத்தில் நடிக்க உள்ளார். சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்க உள்ளதாக ஏற்கனவே படக்குழு தெரிவித்து இருந்தது. இதையடுத்து இப்படம் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில் தற்போது படத்தின் அப்டேட் வெளியாகி உள்ளது.

அதன்படி, 'சியான் 63' படத்தின் படப்பிடிப்பு ஜூன் முதல் வாரத்தில் தொடங்க உள்ளது. இப்படம் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் படமாக்கப்படவுள்ளது. இப்படத்திற்காக, நடிகர் விக்ரம் சுமார் 50 முதல் 60 நாட்கள் வரை கால்ஷீட் ஒதுக்கியுள்ளார்.

# வேலை வாய்ப்பு

## அரசின் 731 ஸ்டெனோகிராபர் வேலைகள் – 12–வது

SSC ஆட்சேர்ப்பு விவரங்கள்
வாரியத்தின் பெயர் SSC – பணியாளர் தேர்வு ஆணையம்
காலியிடங்கள் 731
பதவியின் பெயர் சுருக்கெழுத்தாளர்
தொடங்கும் தேதி 29–04–2026
முடியும் தேதி 15–05–2026
கல்வித் தகுதி 12 ஆம் வகுப்பு
சம்பளம் மாதம் ரூ.35400
பணி இடம் இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கும் முறை ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம் https://ssc.nic.in/

## மக்களே இனி நிம்மதியா கடைக்கு போய் தங்கம் வாங்கலாம்!





சென்னை, மே. 08–

தேர்தல் முடிந்து முடிவுகள் வெளியாகிவிட்டதால் தமிழ்நாடு உட்பட ஐந்து மாநிலங்களிலும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலகிக் கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறது.

எனவே 50,000 ரூபாய்க்கு மேல் ரொக்க பணமாக கையில் கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். நகை வாங்கி வருவதற்கு லட்சக்கணக்கில் கையில் பணத்தை கொண்டு செல்லலாம். தங்கம் வெள்ளி போன்ற பொருட்களையும் எந்தவித தயக்கமும் இல்லாமல் கொண்டு செல்ல முடியும் யாரும் உங்களை நிறுத்தி உங்களுடைய வாகனத்தையோ உங்களுடைய பைகளையோ சோதனை செய்ய மாட்டார்கள்.

## தேவலாபுரம் கிராமத்தில் கெங்கையம்மன் கோவில் 10-ம் ஆண்டு விழா!



ஆம்பூர், மே. 08–

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் கிராமத்தில் திருமலை திருப்பதி ஸ்ரீ கெங்கையம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலின் 10–ம் ஆண்டு தொடக்க விழா இன்று நடைபெற்றது.

இதனை முன்னிட்டு காலையில் விக்னேஸ்வர பூஜை, கலச பூஜை, கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவகிரக ஹோமம் மற்றும் கெங்கையம்மனுக்கு மகா பூர்ணாஹூதி, கலசாபிஷேகம் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து மதியம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு மகா அன்னதானம் வழங்கப்பட்டது. பின்னர் இன்னிசை கச்சேரி நிகழ்ச்சி நடந்தது.

விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள், விழா ஏற்பாட்டாளர்களான கெங்கையம்மன் கோவில் தர்மகர்த்தா இ.வெங்கடேசன், ஊர் பெருந்தனக்காரார் பி.முனிரத்தினம், முன்னாள் ஊர் தலைவர் ஜி.ராஜேந்திரன், ஆம்பூர் தொழில் அதிபர் ரியல் எஸ்டேட் ஜி.ரமேஷ், ஊர் தலைவர் பி.துளசி, ஊர் நாட்டான்மை என். தாமோதரன், ஆர்.எஸ்.ஞானசேகரன், அரிசி கடை ஜி.வெங்கடேசன் உள்ளிட்ட பலர் செய்திருந்தனர். முன்னதாக ஊர் பொதுமக்கள், இளைஞர்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# ‘தி.மு.க.-அ.தி.மு.க. சேர்ந்து ஆட்சி அமைக்க உரிமை கோரினாலும் சாத்தியம்தான்’ - கவர்னர் அர்லேகர்!

சென்னை, மே. 08–

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றியது. த.வெ.க.வுக்கு காங்கிரஸ் கட்சியின் 5 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு கொடுத்திருந்தாலும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் த.வெ.க.வுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.



முன்னதாக, த.வெ.க. தலைவர் விஜய், நேற்று மாலை தமிழக பொறுப்பு கவர்னர் அர்லேகரை சந்தித்தார். அப்போது தங்களை ஆட்சி அமைக்க அழைக்கக் கோரி கவர்னரிடம் கடிதம் வழங்கினார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் விஜய்க்கு இல்லாததால், அவரை ஆட்சியமைக்க வரும்படி கவர்னர் அழைக்கவில்லை.

இந்த நிலையில், தனியார் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கேரள கவர்னரும், தமிழக பொறுப்பு கவர்னருமான அர்லேகர் கூறியிருப்பதாவது;–

“பெரும்பான்மை இல்லாதது விஜய்க்கு மட்டும் பிரச்சினை இல்லை, ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் பிரச்சினை. மைனாரிட்டி அரசு ஆட்சி அமைத்து குதிரை பேரம் நடத்துவதை அனுமதிக்க முடியாது.

118 இடங்கள் இல்லாமல் ஆட்சி அமைக்க அழைக்க முடியாது. 118 எம்.எல்.ஏ.க்களை கண்முன் நிறுத்துங்கள் என்று நான் கூறவில்லை. விஜய் மெஜாரிட்டி எண்ணுடன் வந்தால் ஆட்சி அமைக்க அழைக்க தயார்.

ஆனால் விஜய்யிடம் எந்த பெரும்பான்மையும் இல்லை. விஜய் ஆட்சி அமைப்பதை நான் தடுப்பதாக எப்படி சொல்ல முடியும்? விஜய்யை ஆட்சி அமைக்க அழைப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அடுத்த 2 அல்லது 3 நாட்களில் முடிவு எட்டப்படாவிட்டால் அடுத்த கட்ட முடிவுகள் குறித்து ஆலோசிப்பேன். எஸ்.ஆர். பொம்மை வழக்கின் உத்தரவு தற்போதைய சூழலுக்கு பொருந்தாது. தி.மு.க. – அ.தி.மு.க. சேர்ந்து ஆட்சி அமைக்க உரிமை கோரினாலும் சாத்தியம்தான்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தி.மு.க., அ.தி.மு.க. இணைந்து அரசை உருவாக்கினால்... அதிரடி காட்ட தயாரான த.வெ.க.!

சென்னை, மே. 08–

தி.மு.க.வில் உதயநிதி தலைமையிலான அணியின் இளம் தலைவர்களில் சிலர், விஜய் ஒருமுறை ஆட்சியை பிடித்து விட்டால், எம்.ஜி.ஆரை போன்று அவரை அகற்றுவது சாத்தியமற்ற ஒன்றாகி விடும் என அச்சப்படுகின்றனர். எம்.ஜி.ஆர். ஆட்சியமைத்த பின்னர், தி.மு.க.வை அதிகாரத்திற்கு வர விடவில்லை என்பதே அதற்கு காரணம். கட்சியில் உள்ள மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட மூத்த தலைவர்களும் இதனை நம்ப முடியாமல் உள்ளனர். இரு




திராவிட கட்சிளுக்கு எதிராக பொதுமக்கள் எதிர்வினையாற்றி ஒரே நிலைக்கு கொண்டு சென்று, பரிசோதனை முயற்சியில் ஈடுபட்டு விட்ட வருத்தத்தில் உள்ளனர் என தகவல் தெரிவிக்கின்றது. இந்த நிலையில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்க முடிவு மேற்கொண்டால், தனிப்பெரும் கட்சியாக உள்ள த.வெ.க. அதிரடி முடிவை எடுக்கும் என தெரிகிறது. அதற்கேற்ப கட்சியின் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வும் ராஜினாமா செய்வார்கள் என கூறப்படுகிறது. தனிப்பெரும் ஒற்றை கட்சியாக த.வெ.க. உள்ளது. 108 இடங்களை பிடித்துள்ளது. த.வெ.க.வை ஆட்சியமைக்க கவர்னர் அழைக்க வேண்டும் என கூறுகிறது. அப்படியில்லாமல் தி.மு.க.வோ அல்லது அ.தி.மு.க.வோ கூட்டணி அமைத்து, தமிழகத்தில் ஆட்சியமைக்க உரிமை கோரினால் 108 எம்.எல்.ஏ.க்களும் ராஜினாமா செய்வார்கள் என த.வெ.க. எச்சரித்து உள்ளது.

# விஜய் உயிருக்கு ஆபத்து: டி.ஜி.பி.,யிடம் காங்., புகார்!

சென்னை, மே. 08–

‘த.வெ.க., தலைவர் விஜய் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதால், அவருக்கு உச்சபட்ச பாதுகாப்பு அளிக்க வேண்டும்’ என, டி.ஜி.பி.,யிடம், சென்னை மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும், கவுன்சிலருமான டில்லிபாபு புகார் அளித்துள்ளார்.



அதில், அவர் கூறியிருப்பதாவது: த.வெ.க., தலைவர் விஜய் மற்றும் அவரது கட்சி வேட்பாளர்கள் மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளனர். இது, தமிழக மக்கள் எதிர்பார்த்த வெற்றி. இந்த வெற்றியை உறுதி செய்து, விஜய் ஆட்சி அமைக்க உள்ள நிலையில், அவருக்கு எதிராக பா.ஜ., நெருக்கடி கொடுத்து வருகிறது.

அரசியல் சூழ்ச்சி செய்தும் வருகின்றனர். விஜய்க்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியும் வருகின்றனர். விஜயின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு உள்ளது. இத்தகைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவருக்கும், விஜயுடன் கை கோர்த்து இருக்கும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.,க்களுக்கும் உச்சபட்ச பாதுகாப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொறுமை காக்கவும்: எடப்பாடி பழனிசாமி!

சென்னை, மே. 08–

தமிழக சட்டமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் ஆட்சியை பிடிக்கப்போவது யார் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது. இந்த சூழலில், அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் த.வெ.க. பக்கம் தாவாமல் இருக்க புதுச்சேரி பூரணாங்குப்பத்தை அடுத்த புதுகுப்பத்தில் உள்ள தனியார் சொகுசு தங்கும் விடுதிக்கு நேற்று இரவு வருகை தரத்தொடங்கினர். இதுவரை தமிழகத்தை சேர்ந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ஓ.எஸ் மணியன், தளவாய் சுந்தரம், சேவூர் ராமச்சந்திரன், மோகன், சொரத்தூர் ராஜேந்திரன், அருள்மொழி தேவன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி,



வெங்கடாசலம் உள்பட 25–க்கும் மேற்பட்டோர் வந்துள்ளனர். மீதமுள்ள எம்.எல்.ஏ.க்களும் வருகை தர உள்ளனர். அவர்கள் இன்று மதியம் வரை ஒரு தனியார் சொகுசு தங்கும் விடுதியில் தங்க வைக்கப்பட்டனர். கோடைகாலம் என்பதால் அறைகள் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டிந்தது. எனவே தொடர்ந்து எம்.எல்.ஏ.க்கள் தங்க வைக்க முடியாத சூழல் ஏற்பட்டது. இதையடுத்து அந்த சொகுசு தங்கும் விடுதியில் இருந்து அதே பகுதியில் உள்ள மற்றொரு சொகுசு விடுதியை முழுவதுமாக வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது அங்குள்ள அறைகளில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் யாரையும் சந்திக்கவும், தொடர்பு கொள்ளவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. விடுதியில் தங்கியுள்ள அதிமுக எம்.எல்.ஏக்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி அவர்களிடம் நல்லதே நடக்கும் என்று கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், திமுகவுடன் கண்டிப்பாக கூட்டணி கிடையாது எனவும், அனைவரும் பொறுமை காக்கவும், எம்.எல்.ஏக்கள் யாரும் புதுவையில் இருந்து புறப்பட வேண்டாம்பெரும்பான்மை இல்லாத விஜய் முட்டி மோதி இங்கே வருவார். நம் தலைமையில் ஆட்சி அமையும் எனவும் எடப்பாடி பழனிசாமி பேசியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நொடிக்கு நொடி அரசியல் மாற்றம்!

சென்னை, மே. 08–

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் எந்த கட்சிக்கும் பெரும்பான்மையை தரவில்லை. 234 தொகுதிகளில் ஆட்சி அமைக்க குறைந்தது 118 தொகுதிகள் இருக்க வேண்டும். ஆனால் த.வெ.க.வுக்கு 108 எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே உள்ளனர். த.வெ.க. தனித்து போட்டியிட்டதால் கூட்டணி கட்சிகளின் எண்ணிக்கையும் கிடையாது. எனவே தொங்கு சட்டசபை ஏற்பட்டு உள்ளது.



இருப்பினும் தனிப்பெரும் கட்சியாக இருக்கும் த.வெ.க. ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியது. எனவே தேர்தலுக்கு பிந்தைய கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது. அதற்கு முதல் ஆளாக ஓடி வந்து கை கொடுத்தது காங்கிரஸ். அந்த கட்சியின் 5 எம்.எல்.ஏ.க்கள், இப்போது த.வெ.க.வுடன் சேர்ந்து இருப்பதால் அதன் பலம் 112 என உயர்ந்து இருக்கிறது. இருப்பினும் இன்னும் 6 எம்.எல்.ஏ.க் கள் தேவை.

அதில் 2 கம்யூனிஸ்டுகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் ஆகிய 3 கட்சிகளைச் சேர்ந்த 6 எம்.எல்.ஏ.க்களும், பா.ம.க.வும் உடனடியாக ஆதரவு தருவார்கள் என்று த.வெ.க. நினைத்தது. ஆனால் அந்த கட்சிகள் பிடிகொடுக்காமல், உயர்நிலை கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று கூறியது. அதில் பா.ம.க. எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. இந்த சூழ்நிலையில் த.வெ.க. முதலில் ஆட்சி பொறுப்பேற்று விடலாம் பின்னர், சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கலாம் என்று திட்டமிட்டது. எனவே உடனடியாக கடந்த 7–ந் தேதி (அதாவது நேற்று) முதல்–அமைச்சராக விஜய் பொறுப்பேற்கும் வகையில் அந்த கட்சி நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதற்கு கவர்னர் அர்லேகர் முட்டுக்கட்டை போட்டு விட்டார். அதாவது கடந்த 6–ந்தேதி மாலை விஜய், கவர்னரை சந்தித்து ஆட்சி அமைக்க முறைப்படி உரிமை கோரினார். ஆனால் கவர்னர் எந்த பதிலும் தரவில்லை. இருந்தாலும், த.வெ.க.வுக்கு பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ. இல்லாததால் முதல்–அமைச்சராக விஜய்க்கு அனுமதி தரவில்லை என்று கவர்னர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் நேற்று காலை திடீர் திருப்பமாக கவர்னர் அர்லேகர், விஜய்யை கவர்னர் மாளிகைக்கு வருமாறு அழைத்தார். அதனை ஏற்றுக்கொண்டு விஜய், பட்டினப்பாக்கம் இல்லத்தில் இருந்து புறப்பட்டு சுமார் காலை 10.35 மணிக்கு கவர்னர் மாளிகைக்கு வந்தார். அங்கு அவர் கவர்னர் அர்லேகரை சந்தித்து பேசினார். சுமார் அரைமணி நேரமாக நடந்த பேச்சுவார்த்தை முடிந்து, மீண்டும் விஜய் பட்டினப்பாக்கம் இல்லம் புறப்பட்டு சென்றார்.

கவர்னருடனான இந்த சந்திப்பு குறித்து த.வெ.க. எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் இந்த சந்திப்பு நடந்து சில மணி நேரம் கழித்து. அதாவது பகல் 2.31 மணிக்கு கவர்னர் மாளிகையில் ஒரு செய்திக்குறிப்பு வெளியிடப்பட்டது.

அதில், “கவர்னர் அர்லேகர், தமிழ்நாடு வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய்யை சென்னை கவர்னர் மாளிகைக்கு அழைத்தார். இந்த சந்திப்பின் போது, தமிழகத்தில் அரசு அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை ஆதரவு இதுவரை நிரூபிக்கப்படவில்லை என்று கவர்னர் விளக்கமளித்தார்” என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த செய்தியின் மூலம் கவர்னர் அர்லேகர், த.வெ.க.வுக்கு பெரும் பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்கள். இல்லாததால்தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க வில்லை என்ற தனது கருத்தை பதிவு செய்து இருக்கிறார். ஆனால் விஜய், பெரும்பான்மையை சட்ட சபையில் நிரூபிக்கிறோம். எனவே சட்டப்படி ஆட்சி அமைப்பதற்கு முதலில் அனுமதி தாருங்கள் என்ற கோரிக்கை வைத்து இருக்கிறார்.

ஆனால் அதனை கவர்னர் ஏற்றுக்கொள்ளவில்லை. 118 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு என்ற எண்ணிக்கையை கொடுத்தால்தான் ஆட்சி அமைக்க அனுமதி தர முடியும் என்று திட்டவட்டமாக கூறியிருக்கிறார்.

எனவே கவர்னரின் நடவடிக்கையால், அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து த.வெ.க. நேற்று தீவிர ஆலோசனை நடத்தியது. அதன் தொடர்ச்சியாகத்தான் தி.மு.க. கூட்டணி கட்சிகளின் ஆதரவை விரைவாக பெற த.வெ.க.வினர், அந்த கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு கோரி வருகின்றனர்.

இதுஒருபுறம் இருக்க, திமுக ஆதரவுடன் அதிமுக ஆட்சி அமைக்கவுள்ளதாக தகவல்கள் பரவிய நிலையில், புதுச்சேரியில் உள்ள சொகுதி விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்த அதிமுக எம்.எல்.ஏ.க்களுடன் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்றிரவு ஆலோசனை நடத்தினார்.

சென்னையில் திமுக எம்.எல்.ஏ.க்களுடன் ஆலோசனை நடத்தப்பட்ட நிலையில், அவசர முடிவுகளை எடுக்க அக்கட்சியின் தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு அதிகாரம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தகைய பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் புதுச்சேரியில் இருந்து இன்று சென்னைக்கு திரும்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. புதிய அரசு பொறுப்பேற்கும் வரை அவர்கள் சென்னையில் தங்கவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் என்ன முடிவை எடுக்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில், விசிக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் செயற்குழுக் கூட்டம் தொடங்கி உள்ளது. தவெகவிற்கு முழு ஆதரவா? இல்லையா? என்பதை இன்று மாலைக்குள் அறிவித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே திமுக–அதிமுக கூட்டணி பேச்சுவார்த்தையா? டி.கே.எஸ். இளங்கோவன்: எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அதனை மறுத்திருக்கிறார். அவர் முடிவெடுப்பார். அப்படி அவர் ஒரு முடிவெடுத்தால் அதனை திமுக ஏற்றுக்கொள்ளும்; ஆனால் அந்த முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை என்றார்.

இந்த நிலையில், அதிமுகவுக்கு திமுக ஆதரவு அளித்தால் பாஜகவின் நிலைப்பாடு என்ன என சென்னை பாஜக அலுவலகத்தில் நிர்வாகிகளுடன் நயினார் நாகேந்திரன் தலைமையில் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாஜகவுக்கு ஒரு எம்எல்ஏ உள்ள நிலையில் ஆலோசனை கூட்டத்தில் பாஜகவின் ஒரே எம்எல்ஏ போஜராஜன் பங்கேற்றுள்ளார்.

# கொளத்தூர் தொகுதியில் மு.க.ஸ்டாலின் தோல்விக்கு யார் காரணம்?: புலன் விசாரணையில் இறங்கிய மனைவி துர்கா!

சென்னை, மே. 08–

நடந்து முடிந்த தமிழக சட்டசபை தேர்தலில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க.,200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு இருந்தது. முதல்–அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலினே மேடைக்கு மேடை இதை கூறிவந்தார். ஆனால், யாரும் எதிர்பாராத வகையில், கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட மு.க.ஸ்டாலினே அதிர்ச்சி தோல்வி கண்டார்.





அ.தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூட இவ்வாறு நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த நிலையில், தோல்வியடைந்த மறுநாளே (5–ந் தேதி), கொளத்தூர் தொகுதிக்கு சென்ற மு.க.ஸ்டாலின், தனக்காக வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அதேநேரத்தில், மு.க.ஸ்டாலின் தோல்விக்கு தி.மு.க. நிர்வாகிகளே காரணம் என்ற தகவல் கட்சித் தலைமைக்கு புகாராக வந்தடைந்தது. அதே நேரத்தில், மு.க.ஸ்டாலினின் மனைவி துர்காவும், தனது கணவர் தோல்விக்கு யார் காரணம்? என்பதை ரகசியமாக கண்டறியத் தொடங்கினார்.

கொளத்தூர் தொகுதி உருவான 2011–ம் ஆண்டு முதல், 3 முறை நடைபெற்ற தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற மு.க.ஸ்டாலின், இந்த முறை முதல்–அமைச்சராக அந்தத் தொகுதிக்கு பல திட்டங்களை கொண்டுவந்தார்.

கொளத்தூர் தொகுதியில் சிறப்புப் பள்ளிகள், மருத்துவமனைகள், நவீன நூலகங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பூங்காக்கள் எனப் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார். மாதம் இருமுறை தொகுதி மக்களைச் சந்திப்பதையும் வழக்கமாக கொண்டிருந்தார்.

இத்தனை செல்வாக்கு இருந்தும், 4–வது முறையாக போட்டியிட்டபோது தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் வி.எஸ்.பாபுவிடம் எதிர்பாராத விதமாக தோல்வியை சந்தித்தார்.

தோல்வியால் ஒரு பக்கம் தி.மு.க.வினர் சோர்ந்து போயிருந்தாலும் மற்றொரு புறம் அதற்கான உண்மை காரணத்தை கண்டறிய மு.க.ஸ்டாலினின் மனைவி துர்கா களம் இறங்கினார். முன்பு பொங்கல் மற்றும் திருமண விழாக்களில் தான் சந்தித்த மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் சமூக நல ஆர்வலர்களை போன் மூலம் தொடர்புகொண்டு பேசி, நடந்தவற்றை விசாரித்துள்ளார்.

அப்போது, துர்கா ஸ்டாலினிடம் பல குற்றச்சாட்டுக்குள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது, தொகுதிப் பிரச்சினைகள் குறித்து பொதுமக்கள் முதல்–அமைச்சருக்கு அனுப்பிய கடிதங்கள் படிக்கப்படாமலே குப்பையில் வீசப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டன. அதேபோல், கட்சி நிகழ்ச்சிகளில் தொகுதி மக்களைக் காட்டாமல், வெளியூர்களில் இருந்து பெண்களை அழைத்து வந்து கூட்டத்தைக் காட்டி மு.க.ஸ்டாலினை நிர்வாகிகள் ஏமாற்றியுள்ளனர்.

மேலும், தொகுதியில் உண்மையாகவும், தன்னார்வத்துடனும் பணியாற்ற முன்வந்த நிர்வாகிகள் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டுள்ளனர். வீடு வீடாகச் சென்று தி.மு.க.வினர் முறையாக வாக்கு சேகரிக்கவும் இல்லையாம்.

இந்த அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கேட்டு அதிர்ச்சியடைந்த துர்கா ஸ்டாலின், இதுகுறித்து கட்சித் தலைமைக்கு தகவல் தெரிவித்ததுடன், அதற்கு காரணமான நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கூறியுள்ளாராம். அதன் அடிப்படையில், கொளத்தூர் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் பலரின் பதவிகள் பறிக்கப்படலாம் என்று அண்ணா அறிவாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஸ்னாப்சாட்டுக்கு போட்டியாக இன்ஸ்டாகிராம் களமிறக்கும் புதிய ஆப்!

புதுடெல்லி, மே. 08–

இன்ஸ்டாகிராம் நிறுவனம் ‘இன்ஸ்டென்ட்’ என்ற புதிய புகைப்பட பகிர்வு ஆப்பை சோதனை முறையில் அறிமுகப்படுத்தி, சமூக வலைத்தளங்களில் புதிய கவனத்தை ஈர்த்துள்ளது.



இத்தாலி மற்றும் ஸ்பெயின் போன்ற சில நாடுகளில் தற்போது பரிசோதனை நடைபெற்று வரும் இந்த ஆப், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு தானாக மறைந்து விடும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பகிர்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இன்ஸ்டென்ட் ஆப்பின் முக்கிய சிறப்பு, இயல்பான மற்றும் எடிட் செய்யப்படாத தருணங்களை உடனுக்குடன் பகிர்வதே. இதில் பகிரப்படும் புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை ஒருமுறை மட்டுமே பார்க்க முடியும்; அதிகபட்சம் 24 மணி நேரத்திற்குள் அவை தானாக மறைந்து விடும். மேலும், மொபைல் கேலரியில் இருந்து படங்களை அப்லோடு செய்ய முடியாது. ஆப்ளிகேஷனுக்குள் உள்ள கேமரா மூலம் எடுத்ததை மட்டுமே பகிர முடியும் என்பதால், உள்ளடக்கம் உண்மையானதாகவும் நேரடியாகவும் இருக்கும்.

சில பகுதிகளில் இது தனி ஆப் ஆகவும், சில இடங்களில் இன்ஸ்டாகிராமின் ஒரு அம்சமாகவும் சோதனை செய்யப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020